# தூதன்

தூதன் 34 ஏப்ரல் 2025 தூது 4

அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.
லூக்கா 24:6




தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 04 |
| இராஸ் அல் கைமா போதகர் மடல் | 07 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 10 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 12 |
| ஆயரம்மா மடல் - ஃபுஜைரா | 14 |
| செயலர் மடல் | 16 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 23 |
| தெரிந்துகொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children’s Corner | 32 |
| Birthday Celebrants | 37 |
| Wedding Anniversary | 41 |
| ஆராதனைப் பாடல்கள் | 42 |
| பாரம்பரியப் பாடல்கள் | 44 |
| FAITHFUL | 45 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645

Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆண்டவர் தாமே நம்மோடிருந்து இப்புதிய மாதத்திலும் நம் திருச்சபையின் ஊழியங்களையும், நம் குடும்பங்களையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளின் ஆயர்கள், நமது சபை நிர்வாகஸ்தர்கள், EC அங்கத்தினர்கள் மற்றும் அனைத்து ஊழிய பொருப்பாளர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதத்தில் Women's Retreat, மற்றும் VBS ஊழியங்கள் ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் கிருபை செய்தார். இப்புதிய மாதத்திலும் நமது சபையின் ஊழியங்களை ஆண்டவர் ஆசீர்வதித்து தருவாராக. குறிப்பாக இந்த லெந்து கால சிறப்பு ஆராதனைகள் மற்றும் கன்வென்ஷன் கூட்டங்களை ஆண்டவர் ஆசீர்வாதமாக அமைத்து தருவாராக. இந்நாட்களில் நாம் அதிகமாக ஆண்டவரோடு நெருங்கி வரவும், நமது ஆவிக்குரிய வாழ்வை புதுப்பித்துக் கொள்ளவும் அர்ப்பணிப்போமாக.

**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலிப்பியர் 4:19**

And my God will fully satisfy every need of yours according to his riches in glory in Christ Jesus. Philippians 4:19

அன்பானவர்களே!

வியாபாரி ஒருவர் தனது குதிரையில் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது நடந்து சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவரைக் கண்டார். காலில் செருப்பு கூட இல்லாமல் நடந்து சென்று கொண்டு இருந்ததைப் பார்த்து அவர்மீது பரிதாபங்கொண்டார். குதிரையை நிறுத்திவிட்டு இறங்கி வந்து தன்னுடைய செருப்பை கழற்றி அவனிடம் கொடுத்து நீ அணிந்து கொள். நான் குதிரையில் தானே செல்கிறேன் என்று கொடுத்தார். அவனும் பெற்றுக் கொண்டு நன்றி சொன்னான். அவர் குதிரையில் ஏறியவுடன், ஐயா நீங்கள் குதிரையில் தான் செல்கிறீர்கள், தாங்கள் தங்கள் தலையில் வைத்துள்ள தொப்பியை தரமுடியுமா? நான் வெயிலில் நடக்க வேண்டியுள்ளதே என்றான். அவரும் தொப்பியை கழற்றிக் கொடுத்தார்.

மீண்டும் அவரிடம் ஐயா கடைசியாக கேட்கிறேன். தங்களுடைய குதிரையையும் தருவீர்களா? என்று கேட்டான். அப்பொழுது, வியாபாரி குதிரையிலிருந்து இறங்கி வந்து அவனுடைய கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார். இவ்வளவையும் உனக்குத் தந்தேனே போதாதா என்று கோபத்துடன் கேட்டார். அவன் சொன்னான், எல்லாவற்றையும் கேட்டவுடன் தந்தீர்கள். குதிரையையும் கேட்காவிட்டால் ஒருவேளை கேட்டிருந்தால் தந்திருப்பாரோ என்று என் மனம் அதையே நினைத்துக் கொண்டிருக்கும். நான் நிம்மதியாக இருக்க முடியாது. அதனால்தான் கேட்டேன். நன்றி ஐயா என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

ஆம். அன்பானவர்களே, நாமும் நம் வாழ்விலே ஆண்டவர் தரும் நன்மைகளை நன்றியுடன் பெற்று வாழாமல் தேவைகளை நினைத்து திருப்தியற்ற நிலையிலேயே காணப்படுகிறோம். வேதம் சொல்கிறது, ஆண்டவர் நமக்கு போதுமானவர். அவர் மீது நம்பிக்கை கொண்டு வாழும் போது அவர் நமது தேவைகளை சந்தித்து அற்புதமாக நம்மை நடத்துவார். நம்முடைய தியான வசனத்தில் பவுல் அப்போஸ்தலர் - என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்று சொல்கிறார்.

இந்த வார்த்தையை தியானிப்போம்.
முதலாவது...

### 1. நம்முடைய குறைவில்.. In All our Needs...

பிலிப்பியர் 4:18 எல்லாம் எனக்குக் கிடைத்தது. பரிபூரணமும் அடைந்தேன்... நான் திருப்தியடைந்திருக்கிறேன்.

நம் தேவைகள் அனைத்தையும் சந்திக்க ஆண்டவரால் கூடும். பவுல் அப்போஸ்தலர் பிலிப்பி சபைக்குச் சொல்லும் போது நான் ஊழியத்திற்கான தேவைகளோடிருந்த போது நீங்கள் தாராளமாக கொடுத்து உதவினீர்கள். இப்போது நான் திருப்தியடைந்திருக்கிறேன் என்று சொல்கிறார். பவுலின் திருப்தி என்பது எந்நிலையிலும் மனரம்மியமாயிருக்கும், போதுமென்ற அவரது மன திருப்தியை காண்பிக்கிறது, ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளும் போது அவர் நமது தேவைகளை சந்திக்கிறார். ஆதியாகமம் 22:14ல் “ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான், அதினாலே கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள்வரை சொல்லப்பட்டு வருகிறது” என்று வாசிக்கிறோம். ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு தன் ஒரே மகனை பலியிட துணிந்த ஆபிரகாமின் தேவை சந்திக்கப்பட்டது. நாமும் நம்பிக்கையை ஆண்டவர் மீது வைக்கும் போது நமது ஆவிக்குரிய தேவைகளையும், சரீர தேவைகளையும் ஆண்டவர் சந்திப்பார்.

இரண்டாவது...

**2. தம்முடைய நிறைவில்... According to His Riches...**

**பிலிப்பியர் 4: 19 என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி...**

ஆண்டவர் நமக்கு அருளும் நன்மைகள் எப்பொழுதும் நம்முடைய தகுதியின் படி அல்ல அவருடைய நிறைவிலிருந்து நமக்கு கிடைக்கிறது. நாம் கொடுப்பதற்கு தக்கவோ அல்லது நாம் செய்யும் செயல்களுக்கு தக்கவோ அவர் நமக்கு தராமல் தம்முடைய ஐசுவரியத்தின் படியே நமக்குத் தருகிறார். மத்தேயு 5:45 ல் "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" என்று வாசிக்கிறோம். நாமும் ஆண்டவரின் இரக்கத்தின் மீது நம்பிக்கை வைக்கும் போது ஆண்டவர் நன்மையானதையே தருகிறார்.

மூன்றாவதாக...

**3. கிறிஸ்துவின் கிருபையால்... His riches in glory in Christ Jesus.**

**பிலிப்பியர் 4: 19 கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்...**

ஆண்டவர் நமக்கு அருளும் நன்மைகள் யாவும் கிறிஸ்து இயேசுவின் மூலம் நமக்கு கிடைக்கிறது. பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் 20-ம் வசனத்தில் "தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறதே" என்கிறார். மேலான ஆசீர்வாதமாகிய பாவமன்னிப்பும் பரலோக பாக்கியமும் இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் கிடைக்கப்பெற்ற மிகப் பெரிய நன்மையாகும். இந்த நன்மையை நமக்குத் தரவே ஆண்டவர் மனிதராக கிறிஸ்து இயேசுவாக மண்ணிற்கு வந்தார். யோவான் 3:16ல் "தேவன், தம்முடைய ஒரேபேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று சொல்லப்பட்டபடி இயேசு கிறிஸ்துவே நமக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய ஆசீர்வாதமாகும்.

God Gives and Forgives... Man Gets and Forgets... என்று சொல்வதுண்டு. ஆம். அன்பானவர்களே, நாம் நம் வாழ்வில் ஆண்டவர் தரும் நன்மைகளை மறந்துவிடாமல் நன்றி சொல்வோம். ஆண்டவர் தரும் நன்மைகளில் திருப்தியடைந்து மகிழ்ந்திருப்போம். ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோம். குறைவுகளை நிறைவாக்கும் தேவன் நம்மோடிருந்து நம்மை நன்மையாகவே நடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
Rev.K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

## வேதாகமப் பெண்களும் ரெபேக்காளின் ஜெபமும்

முற்பிதாக்களின் வரிசையில் ஒரே மனைவியையுடையவர் ஈசாக்கு. அவரின் உத்தம மணவாட்டி தான் ரெபேக்காள். தேவ சித்தம் ஒரு குடும்பத்தில் நிறைவேற கணவன் மற்றும் மனைவியின் குடும்ப ஜெபம் எவ்வளவு முக்கியம் என்பதைப் பார்ப்போம்.

### உத்தம மணவாட்டி:

தன் தவப்புதல்வனுக்குப் பெண் பார்க்கும் படலம் முற்பிதாவான ஆபிரகாமின் வீட்டில் துவங்கினது. கர்த்தர் ஆபிரகாமைப் போகச் சொன்ன கானான் தேசத்தில், அக்காலத்திலே ராட்சத வம்சத்தார் இருந்தார்கள். ஆபிரகாம் தன் வேலைக்காரனாகிய எலியேசரை அழைத்துத் தன் குமாரனாகிய ஈசாக்குக்குத் தன் இனத்தாரிடமிருந்து ஒரு பெண் கொண்டு வரும்படி கூறினார். எலியேசர் புறப்பட்டுச் சென்று நாகோரின் ஊரில் சேர்ந்து, துரவண்டை நின்று நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும் போது, குடி என்றும் உன் ஒட்டகங்களுக்கும் குடிக்கும் படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவள் என்று நான் அறியும்படி செய்தருளும் என தேவனிடம் விண்ணப்பம் பண்ணி ஜெபித்து முடித்தவுடன் சந்தித்தவள் தான் ரெபேக்காள்.

ரெபேக்காள் என்றால் "அழகான இளம் பெண்" என்று அர்த்தம். சீரிய தேசத்தானாகிய பெத்துவேலின் குமாரத்தி, லாபானின் சகோதரி, ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோரின் பேத்தி, மகா ரூபவதி, கன்னிகை எலியேசர் கேட்டவுடன் மணமுவந்து சீக்கிரமாய் அவனுக்கு தண்ணீர் கொடுத்தாள் ரெபேக்காள். அத்துடன் பல மைல்கள் கடந்து வந்த 10 பாலைவனக் கப்பல் எனப்படும் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் இறைக்க முன் வந்தாள். அவளது உற்சாகம், குறிப்பறிந்து உதவுதல், சுறுசுறுப்பு, கடின உழைப்பு, பெரியோர்களை மதிக்கும் பண்பு இவைகள் இதில் வெளிப்படுகிறது. இவைகள் அவளுக்குப் பல பொன் ஆபரணங்களை பரிசாகப் பெற்றுத் தந்ததோடு செல்வச் சீமானாகிய ஈசாக்குக்கு மனைவியாகும் நிலைக்கு கொண்டு வந்தது.

### 1. கடவுளோடு கூடிய உறவு:

ஈசாக்கு மற்றும் ரெபேக்காள் தம்பதி கர்த்தருக்கு மிகவும் பிரியமான பிள்ளைகள். ஈ.சாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ண வெளியிலே போயிருந்த போது, தான் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது ரெபேக்காள் ஒட்டகங்களிலே வரக் கண்டான். எலியேசர் தனக்காகப் பெண் பார்க்க சென்றிருக்கிறார் என்று ஈ.சாக்குக்கு தெரியும். அதற்காக ஜெபிக்கும் வேளையில் தான் ரெபேக்காளை கண்டு கொண்டான். அதேபோல ரெபேக்காளும் கடவுளுக்குப் பயந்த நல்ல குடும்பத்தை சார்ந்த பெண். எனவே அவளுக்கு உதவி செய்ய மனம் வந்தது. தாகத்திற்கு தண்ணீர் வார்த்ததால் நல்ல வாழ்க்கையைப் பெற்றுக்கொண்டாள். அவள் தகப்பனும் (ஆதி. 24:50) "இந்த காரியம் கர்த்தரால் வந்தது" உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக் கூடாது என்றார்கள். இவ்வாறு கடவுளோடு கூடிய நல்ல உறவு ரெபேக்காள் குடும்பத்திற்கு இருந்தது.

### 2. கணவனோடு கூடிய உறவு:

ஈசாக்கும், ரெபேக்காளும் வேதாகமத்தில் ஒரு சிறந்த தம்பதியாக இருந்தனர். ஈ.சாக்குக்கு திருமண வயது நாற்பது, அதுவரைக்கும் வேறு எந்த பெண்ணையும் தேடவில்லை. திருமணத்திற்கு பிறகும் ஒரே மனைவியுடன் வாழ்ந்தவன் என்ற பெயரைப் பெற்றவன். தன் மனைவி மலடியாயிருந்தபோதும் அவன் அவளை குறைகூறவில்லை (ஆதி. 25:21). ரெபேக்காள் தன் கணவனாகிய ஈசாக்கின் மீது செலுத்திய நேசத்தால் தன் தாய் மரித்திருந்த துக்கத்தையும் ஈசாக்கு மறந்துவிட்டான். ரெபேக்காள் தன் அன்பினால் கணவனை மேற்கொண்டு விட்டாள். தன் மனைவியின் கர்ப்பத்திற்காக கர்த்தரிடம் ஈசாக்கு ஜெபித்தான். அவன் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் இரங்கி, ரெபேக்காள் கர்ப்பந்தரிக்க கிருபை செய்தார். இவ்வாறு ரெபேக்காள் - ஈசாக்கு தம்பதியினர் தங்களுக்குள் நல்ல குடும்ப உறவை கொண்டிருந்தனர்.

### 3. பிள்ளைகளோடு கூடிய உறவு:

ரெபேக்காளின் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தது. அப்பொழுது அவள், இப்படியானால் எனக்கு எப்படியோ என்று சொல்லி கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனாள். பிள்ளைகள் இரண்டு சந்ததியாய் வரவேண்டும் என்பது தேவ சித்தம்.

எனவே ரெபேக்காள் அதைக் குறித்து பாரமடையவில்லை. தேவனின் சித்தத்திற்கு தன் பிள்ளைகளை ஒப்புக் கொடுத்தாள். நல்ல தாயாக தன் கடமைகளைச் செய்தாள், பிள்ளைகளோடு கடவுளின் அன்பை பகிர்ந்து கொண்டாள். ஆனாலும் தேவ சித்தம் நிறைவேறும் போது பிள்ளைகள் இரண்டு ஜாதிகளாகப் பிரிந்து சென்றனர். அப்போதும்கூட கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் குறை கூறவில்லை. தன் அன்பிலே நிலைத்து இருந்தார்கள்.

ரெபேக்காள் ஜெபிக்கின்ற ஒரு நல்ல குடும்ப பெண்ணாக இருந்தபடியினால் கடவுளின் ஆசீர்வாதத்தையும், குடும்பத்தாரின் ஆசீர்வாதத்தையும், கணவனின் அன்பையும் சம்பாதித்துக் கொண்டாள். கடவுளோடு, கணவனோடு, பிள்ளைகளோடு கூடிய நல்ல உறவையும் பெற்று சிறந்த ஜெப மங்கையாக காணப்பட்டாள். நாமும் ஜெபித்து ஆசீர்வாதத்தை பெறுகின்ற பெண்களாகக் காணப்படுவோம்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஏப்ரல் 2025

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-04-2025 | சிலுவையும் சீடத்துவத்திற்கான முன்னுதாரணமும் | ஆதியா. 12:22-33 | 2 கொரிந். 11:21-31 | மாற்கு 10:46-52 | 92 |
| 13-04-2025 | குருத்தோலை ஞாயிறு ஓசன்னா: ஆண்டவரே விடுவியும் | சகரியா 9:1-12 | 1 தீமோத். 4:6-16 | லூக்கா 19:29-40 | 118:19-29 |
| 17-04-2025 | கட்டளை வியாழன் | யாத்தி. 12:1-7 | 1 கொரிந். 11:23-34 | மாற்கு 14:17-25 | 116 |
| 20-04-2025 | உயிர்த்தெழுதல்: எல்லையற்ற மாற்றத்தைக் கொண்டாடுதல் | 2 சாமுவேல் 22:1-7 | 1 கொரிந். 15:20-28 | மாற்கு 16:1-11 | 16 |
| 27-04-2025 | உயிர்த்தெழுந்த ஆண்டவரால் வலுவூட்டப்படுதல் | ஆதியா. 20:10-22 | அப்போ. 20:7-12 | யோவான் 20:11-18 | 29 |

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

அன்பிற்கினிய திருச்சபையின் அன்பர்களே, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த உயிர்ப்பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் அன்பின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மரணமே ஒரு மனிதனின் கடைசி நிலை. அதற்குப்பின் உடல் எங்கே? உயிர் எங்கே? அவன் எங்கே என்பது தான் கேள்விகளாக வலம் வருகின்றன. இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த பின்னர்தான் மரணத்திற்கு முடிவு வந்தது. வாழ்க்கை இன்னும் தொடரும் என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டது. இயேசு உயிர்த்தெழுவதற்கு முன்னமே இறந்தவர்கள் மூன்று பேரை உயிரோடு எழுப்பினார். யவீரு என்பவனின் மகள், நாயீன் ஊர் வாலிபன், லாசரு இவர்கள் இயேசுவின் இரக்கத்தால் மரித்த பின்னர் மீண்டும் உயிர்பெற்றனர். மரணத்தின்மேல் அதிகாரம் பெற்றவர் இயேசு கிறிஸ்து ஒருவரே என்பதை இந்த நிகழ்வுகள் தெளிவுபடுத்தின. இயேசுவுக்கும் மார்த்தாளுக்கும் இடையே நடந்த நீண்ட உரையாடலை (யோவா. 11:17-27) இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். தன் ஒரே சகோதரனை இழந்து நிற்கும் ஓர் சகோதரியின் மனம் உடைந்த நிலையிலான, நம்பிக்கை சற்று குன்றிய நிலையிலான உரையாடல். இந்நிலையில் இருந்த மார்த்தாளைப் பார்த்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகின்றார்.

**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்** (யோவான் 11:25)

இப்படிக் கூறிவிட்டு லாசருவை உயிரோடு எழுப்புவதின் வழியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சாவின் மீது தமக்குக் கொடுக்கப் பட்டிருந்த அதிகாரத்தையும், மனிதர் எவராலும் நிறைவேற்ற முடியாத செயலைச் செய்து தாம் கடவுளின் திருக்குமாரன் என்பதையும், மூன்றாம் நாள் தாமும் உயிர்த்தெழப் போவதின் (யோவான் 20-ம் அதிகாரம்) முன்னோட்டத்தை மக்களுக்கு விசுவாச உணர்வாகக் கொடுக்கவும் இந்த வல்லமையான செயலை நிறைவேற்றுகின்றார். ஆகவே நாம் அந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள, என்ன செய்ய வேண்டுமென சிந்திப்போம்.

**1. கர்த்தருடைய பாதத்தை தேடுங்கள். (யோவான். 11:20)**

இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் மார்த்தா அவரை எதிர்கொண்டு சென்றார். மரியாள் வீட்டில் இருந்துவிட்டார். இயேசு நாதர் இன்னும் லாசருவின் இல்லத்தில் வரவில்லை அவர் கிராமத்துக்கு வெளியே இருந்தார் (யோவா. 11:30) இந்நிலையில் மார்த்தாள் முதலில் இயேசுவை நோக்கி ஓடினாள்.

மரியாளோ இல்லத்தில் இருந்தார் என்று யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். மரியாள் இயேசுவின் பாதத்தடியிலிருந்து கடவுளின் வார்த்தையைக் கேட்பவராகவும், மார்த்தாள் இயேசுநாதருக்காக இதர வேலைகளைக் கவனிப்பதில் சுறுசுறுப்பாக இருந்தார் (லூக். 12:39-40). மார்த்தாளின் இந்த வேகம். சுறுசுறுப்பு வாழ்வில் தனக்கு அன்பான சகோதரனை இழந்தபோதும், இழப்பின் நடுவிலும், துக்கத்தின் நடுவிலும் நின்று விடவில்லை. இயேசுவைத் தேடி அவரை வரவேற்க அவர் கால்கள் விரைந்தன. வாழ்வில் சந்தித்த எதிர்பாராத இழப்பு மார்த்தாளின் கால்களை முடக்கிவிடவில்லை மறுபடியும் நம்பிக்கையுடன் இயேசுநாதரை நாடி ஓடவைத்தது. தன் துக்கத்தையும், வேதனைகளையும் இயேசுவிடம் வெளிப்படுத்தினார். (யோவா. 11:21). யூத வழக்கத்தின்படி ஆறுதல் கூற அநேகர் பெத்தானியாவில் லாசருவின் சகோதரிகளைப் பார்க்க வந்திருந்தாலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையும் அவர் வார்த்தைகளும், இந்தக் குடும்பத்துக்கு புது நம்பிக்கையையும், ஆறுதலையும், ஏன் தாங்கள் இழந்துபோன அன்பான சகோதரன் லாசருவை திரும்பக் கிடைக்க வழிவகுத்தது. இயேசுவை வாழ்வு தருபவராக ஏற்று, மார்த்தாள் போல் இயேசுவிடம் ஓடிவரும் கால்கள், கர்த்தருடைய பாதத்தை தேடிவந்த ஆவல் இன்றைய விசுவாசிகளின் விசுவாச வாழ்வுக்குத் தேவை.

### 2. கர்த்தர் மேல் விசுவாசத்தை வெளிப்படுத்துங்கள் (யோவான். 11:22)

“இப்போது கூட நீர் கடவுளிடம் கேட்பதை எல்லாம் அவர் உமக்குக் கொடுப்பார் என்பது எனக்கு தெரியும்... என்றார்.” மார்த்தாள் தன் துயரத்தின் நடுவிலும் தனக்கு இருந்த உறுதியான விசுவாசத்தை இயேசுவிடம் வெளிப்படுத்துகிறார். விசுவாச வாழ்விலிருந்து விலகிப்போகும் நிலையில் உருவாகிய தத்துவ மேதைகளின் தத்துவக் கொள்கைகள் (Ex. Gnosticisim / ஞான வாதம்) பெருகியிருந்த கி.பி. 100-ம் ஆண்டில், அதாவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிற்பாடு சுமார் 70 ஆண்டுகள் கழித்து யோவான் நற்செய்தியாளர் இந்த நற்செய்தி நூலை எழுதுகிறார். நற்செய்தியாளரின் உள் நோக்கம் இயேசுநாதர் கடவுளின் மகன் என்பதையும், சாவின் மீதும் அதிகாரம் உள்ளவர் என்பதையும் உலகம் அறிய வேண்டும் என்பதே. இங்கே இயேசுவை மேசியாவாகவும், கடவுளின் மைந்தனாகவும் ஏற்றுக்கொள்ளாத யூத பாரம்பரியத்தின் நடுவில் மார்த்தாள் தன் வார்த்தைகளின் வழி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மேசியாவாகக் காட்டுகின்றார். யோவான் நற்செய்தி நூலின் மைய செய்தியை வெளிப்படுத்தும் கருவியாக மார்த்தாள் பயன்படுத்தப் பட்டிருக்கிறார் (யோவா. 20:31). மார்த்தாள் பற்பல வேலைகளைச் செய்வதில் அதிக கவனம் செலுத்துகிறவராக மட்டும் வெளிப்படுத்தப்

பட்டிருந்தாலும், அவருக்குள்ளும் இயேசு போதித்த வார்த்தைகள் ஊடுருவப்பட்டிருக்கிறது என்பதையும், அவர் அதை இதயத்தில் பதித்திருந்தது மட்டுமல்ல, அதை அறிக்கையிடும் அளவிற்கு அவருக்கு விசுவாசம் மிகுதியாய் இருந்தது என யோவான் நற்செய்தியாளர் சான்று பகர்கின்றார். விசுவாசத்தை வாழ்வில் வெளிப்படுத்தும், அறிக்கையிடும் அளவிலான இறை விசுவாசம் இன்று நம்மில் இருக்கின்றதா என்று இத்தவக் காலத்தில் ஆழ்ந்து சிந்திப்பது அவசியமானது.

### 3. கர்த்தருடைய மகிமையை காணுங்கள் (யோவான். 11:23)

“இயேசு அவரிடம், உன் சகோதரன் உயிர்த்தெழுவான் என்றார்” யூதர்களின் கடைசி காலம் குறித்த நம்பிக்கைப்படி, கடைசி நாளில் ஓர் கடவுளின் தூதனானவர் வந்து கல்லறைகளைத் திறப்பார் எனவும் இறந்துபோனவர்களை வெளியே கொண்டு வருவார் எனவும் நம்பினார்கள். அதுமட்டுமல்ல உயிர்த்தெழுதல் மூன்று நாளுக்குள் மட்டுமே நடைபெறும் என்பது அவர்களின் அழுத்தமான நம்பிக்கை. இந்த அழுத்தமான யூத நம்பிக்கைகளை எல்லாம் மார்த்தாள் இயேசுவிடம் உரையாடும்போது வெளிப்படுத்துகின்றார் (யோவா. 11:24, 39). “நானே உயிர்த்தெழுதல்” என்று அறுதியிட்டுக் கூறும் இயேசுநாதர் எல்லாச் சடங்காச்சாரமான யூத நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து கர்த்தருடைய மகிமையை மார்த்தாளும் காண்கின்றார் (யோவா. 11:40). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீது உறுதியான விசுவாசம் வைப்பதின் வழியாக வாழ்வின் மிகவும் கடினமான சூழல்களின் நடுவிலும், கண்ணீரின் அனுபவங்களிலும், துக்கத்தின் அனுபவங்களிலும் அவர் நம்மோடு இணைவதையும், நமக்காக வல்லமையாகச் செயல்படுவதையும் உணரவும், வெளியரங்கமாக காணவும் இயலும் என்பதை யோவான் நற்செய்தியாளர் சொல்லும் இந்நிகழ்வு விசுவாசிகளுக்கு நம்பிக்கை வழங்குகின்றது. மார்த்தாளுக்கும் - இயேசுவுக்கும் இடையேயான உன்னதமான உரையாடல் தொடங்கிய போது விழிநீர் நிரம்பி துக்கத்தோடு தொடங்கியிருந்தாலும், அந்த ஆரோக்கியமான விசுவாச உரையாடல் பெருத்த மகிழ்ச்சியில் நிறைவு பெறுகின்றது. “உயிர்த்தெழுதலும் ஜீவனும் நானே” எனக்கூறும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கொள்வதும், இன்பத்திலும், துன்பத்திலும் அவரோடுள்ள உரையாடலைத் தவிர்த்து, தள்ளிவிட்டு வாழ்வில் விலகிச் செல்லாமல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதம் என்றும் பற்றி அனுதினமும் அவருடன் உரையாடி விசுவாச வாழ்வில் முன்னேறுதல் அவசியம். உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை உயிர்ப்பின் பாதையில் வழிநடத்துவாராக.

ஆண்டவரின் அருட்பணியில்,
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
சபை போதகர் - இராஸ் அல் கைமா.

## சாந்தம்

கிறிஸ்துவின் அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்களையும் வணங்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் நாம் சிந்திக்க இருக்கும் தலைப்பு "சாந்தம்". இதை வேறுவிதமாக சொன்னால் அமைதி. இந்த அமைதியை விரும்பாத மனிதர்களே உலகில் இல்லை. மனிதர்களோ, மிருகங்களோ! பறவைகளோ! அனைத்திற்கும் அமைதி தேவை.

"சாந்தம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் சொல்லியிருக்கிறார். நாம் சாந்தத்தோடு வாழும் போது, அந்த அமைதி நமக்கும், நம்மைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் நன்மையை உண்டாக்கும்.

வேடிக்கையான ஒரு சிறுவர் கதை உண்டு. தனிமையாய், பசியோடு சுற்றித் திரிந்த சிறு puppy, தன் பசியைப் போக்க ஆகாரத்தை தேடி வலம் வந்தது. அப்போது அதன் கண்களில், ஒரு எலும்பு துண்டு பட்டது. மகிழ்ச்சியாக அதை வாயில் கவ்விக் கொண்டது. தேடி அலைந்ததில் தாகம் எடுக்க, ஒரு ஆற்றங்கரைக்கு போனது. தன்னுடைய பிம்பத்தை பார்த்து இன்னொரு நாய் என்று நினைத்து சத்தமிட்டு குரைத்தது. அந்தோ? பாவம், அந்த எலும்பு ஆற்றில் விழுந்து போனது.

நாமும் நம்முடைய வாழ்வில் பல நேரங்களில் இப்படி அமைதியில்லாமல் அவசரமாய் எடுத்த முடிவுகளால், நமக்கு கிடைக்க வேண்டிய ஆசீர்வாதம் தடைபட்டு போய்விடுகிறது. சாந்தத்தோடும் அமைதியோடும் வாழும்போது, நம்மால் நல்ல சிந்தனைக்குள் இருக்க முடியும், முழு மனதோடு கர்த்தரிடமும் சேர முடியும். அப்படி கர்த்தரை நோக்கி, முழு உள்ளத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் நாம் அவரோடு பிரவேசிக்க முடிந்தால், இந்த பூமியை சுதந்தரித்து கொண்டவர்களாக இருப்போம்.

எபேசியர் 4:2-ல் பார்க்கிறோம், மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்று.

யோனா நினிவே பட்டணத்துக்கு விரோதமாய் பிரசங்கம் பண்ணினார். அந்த செய்தி, நினிவே ராஜாவுக்கு எட்டினபோது, அவர் கோபப்படவோ, தண்டிக்கவோ நினைக்கவில்லை, ஏன் பார்க்ககூட இல்லை. ஆனால் தன்னுடைய ஸ்தானத்தை விட்டு இரட்டுடுத்தி சாந்தத்தோடும், தாழ்மையோடும் கடவுளை நோக்கிப் பார்த்தார், தன் மக்களையும் உபவாச ஜெபத்தில் இருக்கும்படி கட்டளையிட்டார்.

ராஜா அமைதியாய் தன்னையும், தன் மக்களையும் கர்த்தரிடத்தில் கூட்டிச் சேர்த்ததே நினிவேக்கு இரட்சிப்பு வந்தது. "எஸ்தரும்" இக்கட்டான சூழ்நிலையில் சாந்தத்தோடும் தாழ்மையோடும் கர்த்தரை நோக்கிப் பார்த்ததே, யூதருக்கு, யூத குலத்திற்கு இரட்சிப்பு வந்தது. நாமும் இந்த "சாந்தம்", "அமைதி" என்ற ஆவியின் கனியை பெற்றுக் கொண்டால்தான் நம் வாழ்விலும் நாம் நிரந்தரமான விடுதலையை, இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். அப்படிப்பட்ட கிருபையை, ஆவியின் வரத்தை ஆண்டவர்தாமே பரத்தில் இருந்து நம் அனைவருக்கும் அருள்வாராக! ஆமென்!

திருமதி.வனிதா ஜெம்சன்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.



## கற்போம் கிரேக்கம் - 3

### கிரேக்க மொழியின் இரண்டாம் எழுத்து

Beta - β இந்த எழுத்து ஆங்கிலத்தில் B என்ற எழுத்துக்கு ஈடானது.
βαπτίζω- baptizō - Baptism - திருமுழுக்கு

திருமுழுக்கு என்பதற்கு கிரேக்க மொழியில் baptizō என்ற வார்த்தையில் இருந்து பாப்டிஸ்ம் என்ற ஆங்கில வார்த்தையினை நாம் நம் திருச்சபையில் பயன்படுத்துகிறோம் அதற்கு மூழ்கி அல்லது நீரில் மூழ்கி சுத்தம் செய்ய, கழுவ, தண்ணீரில் சுத்தம் செய்ய, தன்னை கழுவி, குளிக்க என்று அர்த்தம்.

திருமுழுக்கு பற்றி மத்தேயு நூலில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. தண்ணீர் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) மனந்திரும்புதலுடனும் பாவமன்னிப்புடனும் இணைக்கப்பட்டுள்ளது. மக்கள் மனந்திரும்புவதற்கும் வரவிருக்கும் மேசியாவுக்காக தயாராக இருப்பதற்கும் அடையாளமாக நதியில் மக்களுக்கு திருமுழுக்கு யோவான் திருமுழுக்கு (ஞானஸ்நானம்ஸ கொடுத்தார். திருமுழுக்கு (ஞானஸ்நானம்) மூலம், தனி நபர்கள் பாவத்திலிருந்து விலகுவதையும் கடவுளின் மன்னிப்புக்கான விருப்பத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்த அழைப்பு விடுத்தார். திருமுழுக்கு இயேசு கிறிஸ்துவில் ஒரு நபரின் பொது நம்பிக்கை மற்றும் அவரைப் பின்பற்றுவதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை குறிக்கிறது. சில மரபுகளில், பரிசுத்த ஆவியைப் பெறுவதோடு கிறிஸ்தவ நம்பிக்கையில் தண்ணீர் ஞானஸ்நானம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. இது ஒரு உள்ளார்ந்த மாற்றத்தின் வெளிப்புற அடையாளமாகவும், இயேசு கிறித்துவில் ஒருவரின் கிறித்து விசுவாசத்தின் பொது அறிவிப்பாகவும் உள்ளது. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது விவிலிய போதனைகளில் வேரூன்றியுள்ளது மற்றும் ஒரு கிறித்துவரின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான படியாகக் கருதப்படுகிறது.

பெரும்பாலும் யூதர்களாகவும் மதமாற்றம் செய்யப்பட்டவர்களாகவும் இருந்த புதிய விசுவாசிகள், திருச்சபையின் தொடக்கத்தில், ஞானஸ்நானத்திற்கு முந்தைய போதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், அத்தகைய போதனை அவசியமானது மற்றும் விரும்பத்தக்கது என்று அங்கீகரிக்கப்படுவதற்கு நீண்ட காலம் ஆகவில்லை, குறிப்பாக புறஜாதியினரின் புறமதத்திலிருந்து தேவாலயத்திற்குள் கொண்டு வரப்பட்டவர்களுக்கு சீடர்கள் வழியாக கிறிஸ்துவை பற்றிய போதனை வழங்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் மதமாற்றமும் ஞானஸ்நானமும் கிட்டத்தட்ட ஒரே அனுபவத்தை உருவாக்கியிருந்தாலும், அத்தகைய ஞானஸ்நானத்திற்கு முந்தைய போதனை கற்பிப்பதற்கான சான்றுகள் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் உள்ளன. ஒருவர் ஞானஸ்நானத்தின் போது தனக்கு கற்பிக்கப்பட்ட போதனையின் வழியாக தனது நம்பிக்கையை ஒப்புக்கொள்வார்.

ஆரம்பகால ஞானஸ்நான ஒப்புதல் வாக்குமூலம் அநேகமாக “இயேசு தான் ஆண்டவர்” என்ற எளிய கூற்றாக இருந்தது. இந்த அறிக்கை ஆரம்ப நாட்களில் போதுமானதாகவும், மன உறுதிப்பாடு உள்ள ஒரு விசுவாச அறிக்கையாக கருதப்பட்டது ஏனென்றால் ஜூலியஸ் சீசரை ஆண்டவர் என்று சொன்ன நேரங்களில் இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கை செய்தால், அரசாங்கத்திற்கும் சீசர்க்கும் எதிராக இழைக்கப்படுகின்ற குற்றமாய் கருதப்பட்டது. அவ்வகையில் பிலிப்பு இத்தோப்பியா அதிகாரிக்கு இயேசுவை பற்றி போதனையினைக் கற்பித்து அந்த பின்பாக திருமுழுக்கு எடுத்துக்கொள்ள ஊக்குவிக்கிறார் (அப்போ 8:37). அதிகாரத்தில் இருக்கிற ஒருவர் அப்படியாக கடவுளை ஏற்றுக்கொள்வது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தின. இருந்தாலும் கிறிஸ்துவை அறிந்தவர்கள் தாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் என்று அறிக்கை செய்து, கிறிஸ்துவிற்காய் அநேக போராட்டங்களை எதிர்க்கொள்ள திடமனதாய் இருந்தார்கள்.

ஞானஸ்நானம் பெற விரும்பும் ஒருவருக்கு போதனையின் காலம் ஆதி திருச்சபையின் காலங்களில் முதல் தற்போதைய காலங்கள் வரை கணிசமாக வேறுபட்டுள்ளது, இது உள்ளூர் நிலைமைகள் மற்றும் நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றம் பெற்றன. ஆரம்ப கட்டத்தில் ஞானஸ்நானம் நேரடியாக மதமாற்றத்தைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டது, ஆனால் நேரம் செல்லச் செல்ல இவை இரண்டிற்கும் இடையே போதுமான போதனை காலம் குறிக்கப்பட்டு அதில் பங்குபெற்று கிறிஸ்துவை அறிந்தபின்பதாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இது மூன்று மாதங்களுக்கு மட்டுமே இருந்தது, ஆனால் மூன்றாம் நூற்றாண்டின் காலத்திற்குள் இது ஒரு நீண்ட கற்றல் காலத்திற்கு அவசியமாகிவிட்டது, மேலும் ஆதி திருச்சபை தலைவர்களும் மூன்று ஆண்டுகளுக்கு கற்பிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தனர்.

இது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கும் ஒப்புக்கொள்வதற்கும் தேவையான உந்துதலை வழங்கியது. இந்த போதனையுடனும், ஞானஸ்நானத்துடன் பரிசுத்த ஆவியின் பரிசுடனும், ஞானஸ்நான வேட்பாளர் அறிவொளி பெற்றவர் என்று அழைக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

திருச்சபையின் பங்காளரை இணைவதற்கு மற்றும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளர்க்கப்படவும் ஞானஸ்நானம் மிகவும் அவசியமானது ஆகையால், ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஒருவர் விருப்பம் தெரிவித்தால்,

கிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொள்ளவும், திருச்சபையின் போதனைகள் என்ன என்பதனையும் தெரிந்துகொள்ளவும் ஊக்கப்படுத்தப்படவேண்டும். இவ்வகையில் எதிர்கால திருச்சபையின் எதிர்கால தலைவர்களை உருவாக்க முடியும்.

வசனம் : மத்தேயு 3:11
நீங்கள் மனம் மாறுவதற்காக நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். எனக்குப் பின் ஒருவர் வருகிறார். அவர் என்னைவிட வலிமை மிக்கவர். அவருடைய மிதியடிகளைத் தூக்கிச் செல்லக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்.

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

# ஆயரம்மா மடல்

## வேதத்தில் பெண்கள் - 3

**பெயர்: அபிகாயில்** **திருமறைபகுதி : 1 சாமுவேல் 25**

அபிகாயில் பைபிளில் அதிகம் அறியப்படாத ஒரு கதாநாயகி, ஒரு பணக்கார அயோக்கியனை மணந்த ஒரு தாழ்மையான பெண். அபிகாயில் தனது ஞானத்தை தனது செல்வத்துடன் இணைத்து, தனது கணவரின் குடும்பத்தின் பாதுகாப்பிற்காக மன்றாடி போரினை தவிர்த்தாள்.

தாவீதின் படைகள் நாபாலின் மந்தைகளைப் பாதுகாத்தன. எந்த எதிர்பார்ப்பின்றி ஊதியம் இல்லாமல் செய்த இந்த உதவியினை, முட்டாள் நாபால் முட்டாள்தனமாக மற்றும் கடுமையான வழியில் தாவீது கருணையினை (25:3) பொதுவெளியில் அவமானப்படுத்தும் வகையில் நடந்துகொண்டான். பொது வெளியில் அவமானப்படுத்திய நாபாலின் வீட்டின் இரத்தத்தால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் (25:22) என்று தாவீது வெறிகொண்டு வருகையில், தீவிரமான உச்சத்தை அடைந்தபோது, அபிகாயில் தாவீதுவை சமாதானப்படுத்த நடவடிக்கை முற்பட்டாள் (25:18). அவள் தாவீதுவுக்கு ஒரு தாராளமான பரிசையும், தாழ்மையான மன்னிப்பையும் செலுத்தினாள்.

பழிவாங்கும் எண்ணம் மனம் தளர அவள் தாவீதுவை வற்புறுத்தினாள். அவள் தாவீதை சமாதானப்படுத்திய பிறகு, அவள் நாபாலிடம் வீடு திரும்பினாள், ஏனென்றால் அவள் ஒரு விசுவாசமான மனைவியாகவும், பயனற்ற கணவனின் பாதுகாவலராகவும் இருந்தாள். அவள் உண்மையுள்ளவளாக மூர்க்கமான நாபாலின் வாழ்வில் தொடர்ந்தாள்.

இரண்டு வெறிபிடித்த ஆண்களின் உச்சகட்ட மோதலைத் தவிர்ப்பதில் அபிகாயில் முக்கிய பங்கு வகித்தாள். அதே நேரத்தில், அவள் ஒரு புத்திசாலித்தனமான ஆசிரியராகவும் இருந்தாள், அவள் கொந்தளிப்பான நேரங்களில் அறிவுறுத்தவும் வழிநடத்தவும் செய்தாள். அபிகாயில் வெளிப்படுத்திய மிகச்சிறந்த குணம் ஞானம். “முட்டாள்” என்ற பெயருக்கு ஏற்ப முட்டாள்தனமான வாழ்க்கை வாழ்ந்த நாபாலின் மனைவியாக வாழ்ந்தபோதும், அவளது குணத்தை வரையறுத்த நாபாலுடன் ஒப்பிடும்போது, அவள் புத்திசாலி மற்றும் நேர்மையானவள். அவசரமாக செயல்பட்ட மற்றும் பழிவாங்கும் கோபத்தால் நிறைந்த தாவீது உடன் ஒப்பிடும்போது, அவள் பொறுமையோடு நிதானமாய் கையாளுகின்ற திறன் கொண்டவள். வேதாகமத்தில் பெயரிடப்படாத பெண்களின் தொகுப்பைப் போலல்லாமல், ஆண்களின் செயல்பாடுகளின் பின்னணியில் மட்டுமே புரிந்து கொள்ளப்பட்ட பெண்கள் மத்தியில் அபிகாயில் தனது கணவருடன் வெறுமனே இணைந்திருக்கவில்லை, அவள் ஒரு புத்திசாலியான மற்றும் அழகான பெண்ணாக, அவளின் ஞானத்தின் வழியாக முட்டாள்தனம் ஒழிந்தது. ஞானம் உயர்த்தப்பட்டது. அபிகாயில் பிரகாசித்தாள், ஆண் ஆதிக்கம் செலுத்தும் உலகில் அபிகாயில் ஞானமுள்ள பெண்ணாக இருந்தாள்.

இன்றைக்கும் அபிகாயில் போல பல பெண்கள் தங்கள் குடும்பத்தில், உறவுகளில், பணித்தளங்களில் சமாதானத்திற்கு ஏதுவான முன்னெடுப்புகளை எடுக்கிறவர்களாக இருக்கின்றனர். பல சூழலில் அபிகாயில் போல ஞானம் கொண்டு செயல்பட்டால் பல மனக்கசப்பு தேவை இல்லாத சண்டைகள், எதிர்ப்புகள், வன்மங்களை நம் வாழ்வில் தவிர்க்கலாம். ஆண் ஆதிக்கம் நிறைந்த உலகத்தில் சில நேரங்களில் அபிகாயில்கள் தோன்றுவதால் சமாதானம் நிலவுகின்றது.

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

# செயலர் மடல்

மாறும் உலக வாழ்வில் - மாறாத தேவ உறவில், கர்த்தர் பாதம் காத்திருக்கும் ஜெப உறவில், நித்தியமான ஜீவ வார்த்தைகளின் தியான உறவில், திருச்சபையாக தேவனை தொழுதுகொள்ளும் ஐக்கிய உறவில், கோர குருசிலே தேவ சித்தம் நிறைவேற தம்மையே அர்ப்பணம் செய்த அருள்நாதரின் தியாக உறவில் திருச்சபையாக வளர்ந்திட, உயர்ந்திட, சிறப்புடன் நிறைந்திட, திகழ்ந்திட தேவன் தாமே ஒவ்வொருவருக்கும் கிருபைகள் தந்தருள்வாராக. கடந்த மூன்று மாதங்களும் திருச்சபையாக தேவன் அருளிச் செய்த சகலவிதமான நன்மைகள், ஆன்மீக ஆசீர்வாதங்களுக்காக தேவாதி தேவனுக்கு மகிமை செலுத்துகிறேன்.

வெள்ளிக் கிழமைகளில் ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கும், சனிக்கிழமைகளில் Jebel Ali ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் St. Paul's Hall-ல் காலை 7:00 மணிக்கும் ஆராதனைகள் நடைபெற தேவாதி தேவன் கிருபை புரிந்தார். Junior Church, Corner Stone, Youth Fellowship, Mens Fellowship, Womens Fellowship, தமிழ் வகுப்புகள், முகாம் சந்திப்பு ஊழியங்கள், மார்ச் மாதமுதல் மூன்றாம் வாரத்திற்கு பதிலாக நான்காம் ஞாயிற்று கிழமைக்கு மாற்றம் செய்யப்பட்ட உபவாச ஜெபம் மற்றும் Area Prayer cell ஊழியங்கள் 15 இடங்களிலும் ஒழுங்காக நடைபெற கருணையுள்ள கர்த்தர் கிருபை செய்தார். காத்தருக்கே கனமும் மகிமையும் செலுத்துகிறேன்.

தேவனுடைய பெரிதான கிருபையால் நமது சபையில் லெந்து கால காலை ஆராதனை ஞாயிறு தவிர தினமும் காலை 6:00 மணி முதல் 6:30 மணி வரை நமது சபைகளின் மூன்று ஆயர்களும் இணைந்து Zoom வழியாக நடத்தி வருகின்றார்கள். தொடர்ந்து சபையார் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நமது சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் விசேஷித்த ஆராதனை 09-03-2025 ஞாயிறு அன்று விசேஷித்த துதி பாடல்களுடன் காலை 6:45 மணிக்கு ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆராதனையைத் தொடர்ந்து காலை 09:45 மணி முதல் 4:00 மணி வரை Glendale School-ல் வைத்து Retreat நடைபெற்றது.

ஆலயத்தில் சிறப்பாக ஆராதனை நடத்தி, சிறப்பு பாடல்கள் பாடிய பெண்கள் ஐக்கியத்தினர் யாவருக்கும், ஆலயத்தில் இறை செய்தி வழங்கிய பொறுப்பாளர் / ஆயரம்மா Mrs. Smily Suthakar அவர்களுக்கும், Retreat-ல் விசேஷித்த இறைசெய்தி வழங்கிய Mrs.Elizabeth Rajkumar அவர்களுக்கும், Retreat-ல் Parenting பற்றி நல்ல ஆலோசனைகள் வழங்கிய Dr.Sweetlyn Benjamin அவர்களுக்கும், பெண்கள் சரீர நலன் பற்றி நல்ல ஆலோசனைகள் வழங்கிய Mrs.Shirly Sam Robin அவர்களுக்கும், இசை வாசித்து உதவிய இசை கலைஞர்களுக்கும், Skit, பாடல்கள் வழியாக கர்த்தரை மகிமைப்படுத்திய ஒவ்வொருவருக்கும், மேலும் பெண்கள் ஐக்கிய சங்க ஒருங்கிணைப்பாளர் Mrs. Hemslyn Shyla Davis அவர்களுக்கும், Fujairah, Ras Al Khaimah கிளைச்சபைகளில் இருந்து பங்குபெற்ற பெண்கள் ஐக்கியத்தினருக்கும் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திருச்சபையின் VBS 2025 கடந்த 23-03-2025 ஞாயிறு காலை ஆராதனையைத் தொடர்ந்து VBS Inagural நடைபெற்றது. 24, 25, 26, 27, 28 திங்கள்கிழமை முதல் வெள்ளிகிழமை வரை தினமும் மாலை 4:00மணி முதல் 7:00மணி வரை Glendale School-ல் வைத்து சிறப்பாக நடைபெற கர்த்தர் அருள்புரிந்தார். Mrs. Jenni Sheeba Edwin அவர்கள் Inhouse Director ஆக வெகு சிறப்பாக பணியாற்றினார்கள். அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து சிறப்பாக பணியாற்றிய VBS Teachers, Volunteers, செயற்குழு அங்கத்தினர்கள், முக்கிய பொறுப்பாளர்கள், மேலும் பலவிதங்களில் உதவிகள் செய்த யாவருக்கும், வாகனங்களில் பிள்ளைகளை அழைத்து வர உதவிகள் செய்த அதன் பொறுப்பாளர்கள் யாவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு VBS சிறப்பாக நடத்தித் தந்த துபாயிலுள்ள CSS குழுவின் VBS Director Mr.Nikhil George அவர்களுக்கும் குழுவினருக்கும் நன்றி செலுத்துகிறேன். ஒவ்வொரு நாளும் VBS-ல் 500-க்கும் அதிகமான பிள்ளைகள் கலந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தார். VBS சிறப்பாக நடைபெற ஜெபித்த, பலவிதங்கவில் உதவிகள் செய்த யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

ஜெபல் அலி ஆலயத்தில் 15-03-2025 சனிக்கிழமை நடைபெற்ற பாடல் ஆராதனையில் தனியாக, குழுவாக, குடும்பமாக, Prayer Cell ஆக விசேஷித்த பாடல்கள் பாடியவர்களுக்கும், துபாய் ஆலயத்தில் 23-03-2025 ஞாயிறு காலை ஆராதனைக்கு முன்பு Praise & Worship பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்திய Sharjah B Prayer Cell அங்கத்தினர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

16-03-2025 ஞாயிறு அன்று Gems Missionary சங்க General Secretary Bro.அகஸ்டின் ஜெபக்குமார் அவர்களும், 23-03-2025 ஞாயிறு அன்று கத்தார் CSI திருச்சபையின் போதகர் Rev. Darvin Vino அவர்களும் கலந்துகொண்டு தேவசெய்தி வழங்கினார்கள். அவர்களை வாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆத்தும பாரத்தோடு நமது சொந்த தேசத்தில் கிறிஸ்துவை அறியாது வாழும் மக்கள் மத்தியில் பற்பல மிஷனரி ஊழிய ஸ்தாபனங்கள் மூலம் நாம் திருச்சபையாக 100 மிஷனரிமார்களை தாங்கத்தக்கதாக கர்த்தர் நமக்குத் தந்த மேலான கிருபைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். மேலும் 15 ஊழிய ஸ்தாபனங்களுக்கு உதவிகள் செய்ய கர்த்தர் பாராட்டிய கிருபைகளுக்காகவும், மிஷனரி சிறுவர்களின் கல்வி சம்பந்தமாகவும் மற்றும் பற்பல நிலைகளில் சரீர குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலமாகவும், திருச்சபையாக ஜெபத்தோடு தாங்கிட கர்த்தர் பாராட்டி வரும் தயவுகளுக்காகவும், கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். கொளகூர் மிஷனரி பணித்தளத்தில் நமது திருச்சபை தாங்கி வரும் மருத்துவமனை மருத்துவ பணிகளுக்காகவும் அங்கு பணிபுரிந்து வரும் Dr. Melchis மற்றும் Dr. Mrs. Daphni அவர்களின் அர்ப்பணிப்புகளுக்காகவும் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிப்போம், சிகிச்சைக்காக கடந்து வரும் மக்களுக்காகவும், அவர்களின் இரட்சிப்புக்காகவும் தவறாது ஜெபிப்போம்.

கர்த்தரையே நம்பி இந்த தேசத்தில் நாம் திருச்சபையாக ஏறெடுத்து வரும் ஜெபத்திற்கு விரைவாக CDA அதிகாரிகளிடமிருந்து Worship License மற்றும் Bank Account open செய்ய அனுமதியும் கிடைக்க கிருபை செய்வாராக. ஜெபமே ஜெயம். Praise be to God Almighty.

Moses Vijaya Kumar, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"ஏழையைப் பரிகாசம் பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான், ஆபத்தைக் குறித்துக் களிக்கிறவன் தண்டனைக்குத் தப்பான்." நீதிமொழிகள் 17-5

சர்வமும்
ஆனவரே...
சர்வ வல்லமை
கொண்டவரே...
அண்டம் முழுதும்
ஒரே இறைவனில்
அடக்கம். அவரே
கர்த்தர்.
விண் நிறைந்து
மண் நிறைந்து
எங்கும் எதிலும்
நிறைந்து இருப்பவரும்
கர்த்தரே...
ஒளியும். ஓசையும்
அகிலம்
காணும் காட்சியும்
கர்த்தரே...
உயர்ந்ததற்கெல்லாம்
உயர்ந்தவராகிய
பரிசுத்தமானவராகிய
மூவுலகும் காக்கும்
கர்த்தரை ...
துதிகொண்டு
துதிப்பவர்க்கு
ஆனந்தம்
ஆனந்தம்
அழிவில்லா
ஆனந்தம்
வாழ் நாளிலே..
புத்துயிரும்
புது வசந்தமும்
தரும்...
புனிதமான
தவக்காலம்...

மனம் கசிந்துருகி
இயேசுவில் கலந்துருகி
இரக்கமான
இதயத்துடன்
ஏழை எளியவருக்கு
கேட்காமலே
உதவுவதும்
தானம் செய்வதும்
தலை சிறந்த
தவக்காலம்
நமக்கு... ஒரு
பொற்காலம் உணர்க..
சகோதரரே...
கர்த்தரால்...
படைக்கப்பட்ட
மனிதராகிய நாம்
எவரையும்-
பரிகாசம் பண்ணுவது
நன்றன்று.
அதிலும் ஏழையை
பரிகாசம் பண்ணுவது
பாவம் என்பதுடன்
கர்த்தரை
நிந்திப்பது ஆகும்.
ஆபத்தை
வாய் கொடுத்து
வாங்க வேண்டுமா...
கடவுள் கர்த்தரின்
தண்டனை என்பது
எந்த வடிவில்
எப்போது வரும்
என்பதை
உணர்வீர்களா...
உணர்ந்தால்...

அன்பே பிரதானம்
ஆண்டவர் வாக்கு
நினைவில் கொள்க
அன்பானவரே..
ஊனக் கண்கொண்டு
இயேசுவை
காணமுடியாது
இல்லாதவரிடம்
இரக்கம் காட்டும்போது
ஆதரவற்றவரை
அரவணைக்கும் போது
வாழ்வில் வாடும்
வயோதிகருக்கு
ஊன்று கோலாய்
வந்து உதவும் போது
நோயால் நொந்து
போனவரை
ஆறுதலும் தேறுதலும்
தந்து... வருடிக்
கொடுக்கும்போது
இயேசுவின்
தனிப் பெருங்
கருணையால்
அன்பு மயமான
சரீரம் ஒன்று
நமக்குள்ளே
உண்டாகும்.
அச்சரீரத்திற்கு
அன்புமயமான
கண்களும் காதுகளும்
உண்டு அவற்றால்...
அன்பரே இயேசுவைக்
காணவும்
கேட்கவும் முடியும்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## திருச்சபை ஜெபநாள் 06-04-2025 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.
- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- பிப்ரவரி மாதம் நடைபெற்ற Women's Retreat, VBS மற்றும் ஆராதனைகள் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக துதிப்போம்.
- குளிர்காலத்தில் தந்துவந்த ஆரோக்கியத்திற்காக, பாதுகாப்பிற்காக ஆண்டவரைத் துதிப்போம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ஃபுஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- திடப்படுத்தல் பெற ஆயத்தப்படும் பிள்ளைகளுக்காக

- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனையின் மருத்துவர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
- லெந்துகாலங்களை உண்மையாய் ஆசரிக்க, ஆராதனைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளின் ஆசீர்வாதத்திற்காக

## இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, மனித நேயமும், வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைநீரை பாதுகாத்து பயன்படுத்த ஜெபிப்போம்.
- இந்திய அரசு பாரபட்சமில்லாமல், நடுநிலையோடு ஆட்சி செய்ய
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர, மத தீவிரவாத அமைப்புகளின் மனமாற்றத்திற்காக
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக
- தேசத்தில் நடைபெறும் அனைத்து மிஷனெரி ஊழியங்களுக்காக

## ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- UAE தேசங்களில் வசிக்கும் மக்கள் நல்வாழ்வுக்காக
- அரசர் குடும்பங்களுக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு வேலைகள் கிடைக்க
- வேலை வாங்கித் தருவதாக ஆசை காட்டி அழைத்து வந்து ஏமாற்றப்படுவோருக்காக
- UAE-ல் உள்ள CSI திருச்சபை ஊழியங்களுக்காக
- UAE-ல் நடைபெறும் அனைத்து திருச்சபைகள் ஊழியங்களுக்காக
- அனைவருக்கும் ஆண்டவரின் நற்செய்திக்காக
- அனைத்து சமயத்தாரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ
- சாலை விபத்துகள் தவிர்க்கப்பட, வாகன ஓட்டிகளின் பாதுகாப்புக்காக

## உலக நாடுகளுக்காக ஜெப வேண்டுதல்கள்

- உக்ரைன் - ரஷ்யா போர் சமாதானத்திற்காக
- இஸ்ரவேல், பாலஸ்தீனம், லெபனோன், ஈரான் தேசங்களுக்காக
- உலக நாடுகள் சமாதானத்திற்காக
- பருவநிலை மாற்றத்திற்காக, Forest தீவிபத்துக்கள் தவிர்க்கப்பட
- உலகம் முழுவதும் நடைபெறும் ஆண்டவரின் திருப்பணிக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக ஜெபிப்போம்.
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக ஜெபிப்போம்.
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத்திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக ஜெபிப்போம்.
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெறவும் ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும், உயர்கல்விக்காக தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ஒவ்வொரு வாரமும் நடைபெறுகின்ற camp ஊழியங்களுக்காக
- CDA அங்கீகாரத்திற்காக, Dubai தேசத்தில் CSI Tamil Parish ஆலயம் எழுப்ப ஜெபிப்போம்.
